கிருபையுள்ள வார்த்தை®

KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 24 | ஆகஸ்ட் AUGUST | 2023

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தாரூ. 600/-



கௌரவ ஆசிரியர் BETTY CHOATE

ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை	3
பெண்கள் பகுதி	8
வாலிபர் பகுதி	9
வரலாற்றில்..	10
சிறுவர் பகுதி	11

In Memory of J.C. CHOATE

Guest Editors : **Betty Choate, Jerry & Paula Bates**

Editor : **Dr. P.C. PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லி ராஜா. M.Th.,
R. ஆண்டனி ராஜா. D.Th.,M.B.A. (Bible Studies)
Dr. V.S. இம்மானுவேல். M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
P. பேபி ராஜா. D.Th., **E. ஜோசப் பிரதீப்.** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் **B.** கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் **V.** சுப்பிரமணியன் M.A., B.L.

கிருபையுள்ள வார்த்தை
TV நிகழ்ச்சிகள்

நம்பிக்கை T.V. யில்

ஞாயிறு மதியம் 3:30 மணி

தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 7:00 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா.** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

OUR ENGLISH TV PROGRAM

SALVATION TV

Every Sundays 2pm

Speakers:

Jerry Bates & Kingsly Rajah

வாசகர்கள் கவனத்திற்கு !

உங்களுக்கு அனுப்பப்படும் நமது மாத இதழ், சரியான காரணமின்றி சில நேரங்களில் திரும்பி வருவதால், உங்களுடைய தெளிவான முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை எங்களுக்கு அனுப்பிவைக்கவும்.

Phone : 92 4421 4421, 92 4431 4431, 99 9426 7004

கிருபையுள்ள வார்த்தை

பரலோக பிதாவின் மனதுருக்கத்தை பறை சாற்றும் வார்த்தை.

World Literature Publication : Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

மனதுருக்கமான கர்த்தர்

ஆசிரியர் உரை
Dr. P.C. பிலேமோன் ராஜா

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், இரக்கமும் உருக்கமும் நீடியசாந்தமுள்ள சர்வவல்ல பிதாவின் பெயராலும், மனதுருக்கமான ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயராலும், நம்மை வழிநடத்துகின்ற பரிசுத்த ஆவியின் பெயராலும் எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

அன்பானவர்களே, ஆகஸ்ட் 19ம் தேதியை 'உலக மனிதாபிமான தினம்' என்று அனுசரிக்கின்றனர். மனிதாபிமானமாக ஒருவர் இருக்க வேண்டுமென்றால், அவருக்குள் "உருக்கமான மனது'' இருக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. ஆகையால், நாம் இந்த மாதம் சர்வவல்ல பிதாவின் பண்புகளுள் ஒன்றாகிய, 'மனதுருக்கம்' என்பதனைக் குறித்து வேத வசனங்களின் துணைக்கொண்டு அறிந்து, நம் கிறிஸ்தவ வாழ்வை மேம்படுத்தும்படி தியானம் செய்வோம்.

நம்மை படைத்த நம் பிதா மனதுருக்கமுள்ளவராக இருக்கின்றார். **சங்கீதம் 116:5** "கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர், நம்முடைய தேவன் மனஉருக்கமானவர்.'' மேலும், மனதுருக்கம் என்பது நமது ஆண்டவர் இயேசுவிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய உயர்ந்த பண்பாக இருக்கின்றது. அவர் மனதுருகின நிறைய நிகழ்வுகள் புதிய ஏற்பாட்டில் உள்ளது என்பதை நாம் அறிவோம். நாமும் அவரைப் போலவே நடக்க வேண்டியவர்களா இருக்கின்றபடியால், இந்த செய்தி நமக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்பது நிச்சயமே.

1. சத்துவம் (பெலன்) இல்லாதவர்களைக் கண்டு மனதுருகினார்

மத் 14:14 "இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்."

முதலாவது, நமது ஆண்டவர் இயேசு, சத்துவமற்ற மக்களை கண்டபோது மனதுருகினார் என்று அறிகின்றோம். நோயாளிகளைப் பார்த்து அவர்கள் படும் வேதனைகளை உணர்ந்தவராய், மனதுருகி அவர்களை குணமாக்கினார். **மத் 20:34** "இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார்; உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின்சென்றார்கள்.'' ஏனெனில், அவர் நாம் படுகின்ற வேதனையை மாத்திரம் அறிந்தவர் அல்ல, அந்த வேதனையின் தன்மையையும், வலியின் கொடுமையையும் முற்றும் அறிந்தவர்.

அவர் நம் பெலவீனங்களை அறிந்தவர் மாத்திரமல்ல, நம்முடைய பெலவீனங்களை நீக்கி நம்மை பெலப்படுத்தவும் அவராலே மாத்திரம் தான் ஆகும். ஆகையால் தான், அவருடைய சித்தப்படி அன்று அற்புதமாக (எந்தவித மருந்துகளின்றி, அவர் வார்த்தையினாலே) சுகப்படுத்தினார். இன்றும் நம் ஜெபங்களைக் கேட்டு, அவருக்கு சித்தமானால் கிருபையாக சுகப்படுத்துகின்றார். **யாக்கோபு 5:14–16** "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும் படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது."

விதவை தாய், தனக்கென்று ஆதரவாக இருந்த ஒரே மகளின் பாடைக்கு பின்னே அழுதுகொண்டு சென்றதைக் கண்டு, மனதுருகி தேடிச்சென்று உதவினார். **லூக் 7:13–15** "கர்த்தர் அவளைப் பார்த்து,

அவள் மேல் மனதுருகி; "அழாதே" என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: "வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்."

"அன்று அற்புதமாக சுகப்படுத்தினவர், இன்று ஏன் செய்வதில்லை?'' என அநேகர் நம்மிடம் கேட்கலாம். ஏன், இந்த கேள்விகள் நமக்குள்ளும் மறைந்திருக்கலாம். மேலும், மருந்துகள் தான் குணமாக்குகின்றது என்றும் வாதிடலாம். ஒரே வயதுடைய ஒரே பலமும் உடல் வலிமையும் உள்ள இருவர், ஒரே நோயினால் பாதிக்கப்படும்போது, இருவரில் ஒருவர் குணமாகின்றார், மற்றொருவர் மரித்து போகின்றார். இங்கே மருந்துகளின் வீரியம் எங்கே போனது?

பிறவியிலே கண்பார்வையற்ற ஒருவரின் கண்களில், ஆண்டவர் சேற்றை பூசி, சீலோவாம் குளத்தில் கழுவு என்றார். அவன் கழுவின பின்பு சுகமாகி பார்வையடைந்தான். இங்கே அவனை சுகமாக்கியது எது? ஆண்டவர் பூசிய மண்ணும், எச்சிலுமா? குளத்தின் தண்ணீரா? அல்லது ஆண்டவர் இயேசுவா? கர்த்தர், அவன் விசுவாசத்துடன் அவருக்கு கீழ்ப்படிந்ததினாலே, அவனை சுகமாக்கினார் என்பது தான் பதிலாக இருக்க முடியும். ஏனெனில், அவனது விசுவாசத்துடனான கீழ்ப்படிதல் தான், அவனை சுகப்படுத்த கர்த்தரை தூண்டியது. **யோவா 9:6,7** "இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி; நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்."

ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்கின்ற சர்வவல்ல கர்த்தரை நாம் நம்புகிறோம்! அவர் செய்கின்ற அற்புதங்களினாலே நாம் அவரை விசுவாசிக்கும்படி அழைக்காமல், அவரது வார்த்தையைக் கேட்டு, அதினிமித்தம் அவரை விசுவாசிக்கும்படிதான் நம்மை அழைக்கின்றார் **(ரோமர் 10:13-17).** எல்லாவற்றிற்க்கும் மேலாக, அவரது வார்த்தையை மகிமைப் படுத்தியிருக்கின்றார். **சங்கீதம் 138:2** "உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்."

இன்றைய நாட்களில் அவர் அற்புதங்களை செய்து தன்னை நிரூபிக்கவும், தன்னை நம்பவும் செய்வதில்லை. மாறாக, நாம் அவரை அவரது வார்த்தையினால் (பைபிளினால்) மாத்திரம் நம்பச் சொல்கின்றார். அவ்வாறு நம்புகின்றவர்களின் வாழ்வில் நன்மைகளையும் செய்கின்றார். ஆகையால், 'நன்மை செய்வதினால்' நம்புகின்ற பரிதபிக்கபடதக்க கூட்டமாக நாம் இல்லாமல் **(1 கொரி 15:19).** அவரை விசுவாசிப்பதால் நன்மைகளை அனுபவிக்கின்ற பரிசுத்த கூட்டமாக இருப்போம் **(எபிரெயர் 11:6).**

ஆதி மனிதனாகிய ஆதாம், அவரது வார்த்தையை நம்பாமல், கீழ்ப்படியாமையினாலே பரிசுத்தமிழந்து பாவியானான். அதனால், மனுக்குலம் அவரது வார்த்தையினை கேட்டு, விசுவாசித்து, கீழ்ப்படிவதினால் பாவம் இழந்து, பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்பது அவருடைய சித்தமாக இருக்கின்றது. ஆகையால், ஆண்டவர் மனதுருக்கத்துடன் நடந்த நோக்கத்தினை நாம் அறிந்து, அவ்வாறு நாம் நடக்க முயலுவோம்!

மேலும், நம் ஆண்டவர் மனதுருகி செய்தவைகளை நாம் ஏராளமாக வேதாகமத்தில் படிக்க முடியும். நம் வாழ்விலும் அதை அனுபவித்திருக்க முடியும். தன்னை கொலை செய்ய வந்த மல்குஸ் என்பவனின் மீது மனதுருகி, அறுந்த அவன் காதை

மீண்டும் ஒட்டவைத்து சுகப்படுத்தினார் **(லூக்கா 22).** மனதுருக்கம் என்பது மனக்கடினத்திற்கு **(கல்மனதிற்கு)** எதிரானது; அதாவது இரக்கமற்ற செயலுக்கு எதிரானதாகும். நம்மிடம் உதவிகேட்டு வருபவர்களையும், உண்மையாக தேவை உள்ளவர்களையும் எப்படி நடத்துகிறோம்? நமது ஆண்டவரைப் போல இரங்குகிறோமா? அல்லது, மனதை கல்லாக்கிகொண்டு வாழ்கின்றோமா? சற்று சிந்திப்போம். சத்துவமற்றவர்கள் மீது நாமும் நமது ஆண்டவரை போல மனதுருக்கமுடையவர்களாக நல்ல சமாரியன்களாக இருப்போம் **(லூக் 10:33).** அதுவே அவரது சித்தமாகும். **கலா 6:2** "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்."

2. சத்தியம் அறியாதவர்களைக் கண்டு மனதுருகினார்

மார்கு 6:34 "இயேசு கரையில் வந்து, அநேக ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்.'

மக்கள் மனம்போன போக்கில் சரியான வழிநடத்துனர் இன்றி சிதறி, வாழ்வை சீரழிவிற்கு நேராக கொண்டு சென்றதைப் பார்த்து ஆண்டவர் இயேசு, மனதுருகி, அவர்களுக்கு நல்ல வழியை காண்பிக்க உபதேசித்தார். சத்தியத்தினை மக்கள் அறியாததை கண்டு, அவர்கள் மீது ஆண்டவர் இயேசு மனதுருகினார்.

சத்தியம் என்றால் என்ன? சத்தியம் ஏன் முக்கியம்? அதனை ஒருவர் ஏன் அறிந்துகொள்ள வேண்டும்? அதன் அவசியம் என்ன? சத்தியம் பாவத்திலிருந்து மனிதனை விடுதலையாக்கும் **(யோவான் 8:32).** பாவியை பரிசுத்தமாக்கும் **(யோவான் 17:17).** சத்தியம் பேதையை ஞானியாக்கும் **(சங்கீதம் 19:7)** சத்தியம் ஆறுதல் தரும் **(சங்கீதம் 119:19,50)** என சத்தியத்தின் பலாபலன்களைக் குறித்தும், நாம் அறிய வேண்டியதின் அவசியத்தினைக் குறித்தும் நீண்ட பட்டியல் ஒன்றை சொல்லிக்கொண்டே போகலாம்.

இன்றைய நாட்களில் நிறைய பேருக்கு வசனம் தெரிகின்றது. ஆனால், அந்த வசனத்தின் சத்தியம் தெரிகின்றதா? அதனை தெரிந்திருக்கின்றோமா? என்பது மிக அவசியமான ஒன்று. அதாவது வசனத்தினை மனப்பாடமாக அறிந்திருக்கின்ற நாம், அதனுடைய உண்மையான பொருள் (சத்தியம்) என்னவென்று அறிந்திருப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். அதனை அறியாதபடியினால்தான், யூதர்கள் கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து கொன்றனர் **(லூக்கா 23:34).** மேலும் நாம் கிறிஸ்து ஆரம்பித்த ஒரே சபையை பல்வேறு உபதேசங்களினாலே உடைத்து, சுக்குநூறாக்கி, கிறிஸ்துவின் தியாகத்தினை, பிதாவின் கனவினை (தரிசனத்தை), பரிசுத்த ஆவியின் ஆறுதல் மற்றும் வழிநடத்துதலை வீணடித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஓசியாவின் தீர்க்கதரிசனத்தினை நினைவில் கொள்வோம் **ஓசியா 4:6** "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்." சத்தியத்தினை நாம் அறியாமல் போனால் பாதிப்பு நமக்கு மட்டுமல்ல, நம் தலைமுறைக்கும் என்பதனை மனதில் கொள்வோம். ஆகையால், சத்தியத்தினை அறிவதிலும், சத்தியத்தினை அறிவிப்பதிலும், பாக்கியவான்களாக பாக்கியவதிகளாக இருப்போம். **மத்தேயு 5:6** "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்."

சத்தியம் அறியாதவர்களைக் கண்டு மனதுருகிய ஆண்டவர் இயேசு, அவர்களுக்கு சத்தியத்தினை அறிவித்தார். அவர்கள் குழுவாக இருந்தாலும் (மலைபிரசங்கம்), குடும்பமாக இருந்தாலும் (லாசரு

குடும்பம்), தனி நபராக இருந்தாலும் (நிக்கதேமு, சமாரிய பெண்), சத்தியத்தினை அறிவித்தார். பரிசுத்த ஆவியானவரும் சுயமாக ஒன்றும் போதியாமல், ஆண்டவர் இயேசு போதித்த சத்தியத்தினை நினைப்பூட்டி, அதிலே நம்மை வழிநடத்துவார் என வாக்குத்தத்தமும் செய்தார். **யோவான் 16:13–15** "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்."

மனதுருக்கம் என்பது, ஆத்தும பாரத்தின் வெளிப்பாடு. ஆத்தும பாரம் என்பது, மனதுருக்கத்தின் செயல்பாடு. அதாவது, மனதுருக்கம் என்பது ஆத்தும பாரமாக வெளிப்படும். ஆத்தும பாரம் என்பது மனதுருக்கமாக செயல்பட வைப்பதாகவும் இருக்கின்றது. ஆகையால் நாமும், சத்தியமறியாத மக்களை கண்டு, மனதுருகி, அவர்களுக்கு சத்தியத்தினை அறிவிப்போம். அது நம் கடமை; சகல அதிகாரமுடைய கர்த்தர் நமக்கு கொடுத்த கட்டளை. **மத்தேயு 28:18–20** "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

3. சத்தியத்திற்கு திரும்புபவர்களை கண்டு மனதுருகினார்

ஏசாயா 55:7 "துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்."

சத்தியத்தினை அறிந்துக்கொண்டு, அதற்கு தங்களை அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள். காலப்போக்கில் சத்தியத்தினைவிட்டு விலகி, இந்த உலகத்தின் பின்னே ஓடி, அப்படி ஓடுவது புத்திசாலித்தனம் என்று எண்ணிக்கொண்டும், மாயையை உண்மையென்று நம்பிக்கொண்டும் வாழ்ந்தவர்கள். தங்களுக்கு கையளிக்கப்பட்ட இந்த வாழ்வின் உண்மையான நோக்கம் அறிந்து, தாங்கள் செய்த பாவத்தினை உணர்ந்து, திருந்தி, திரும்பி சத்தியபராராகிய தம்மிடம் வந்து, தங்களை மறு அர்ப்பணம் செய்பவர்களை கண்டு, மனதுருகி, மன்னித்து மறுவாழ்வளிக்கின்றார். **ஏசா 54:10** "மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்."

சத்தியத்தினை விட்டு விலகுவது மிகவும் மோசமான பாவமாகும், அது மாபெரும் விளைவுகளையும் அழிவுகளையும் அவர்களது வாழ்வில் உண்டாக்கும் அபாயகரமான செயலாகும் **(2 பேதுரு 2:19–22).** ஏனெனில் உலகத்தின் பின்னே ஓடி உலகம் முழுவதையும் சம்பாதித்து, தன் கைவசப்படுத்தினாலும், அவையாவும் அவனது ஆத்துமாவிற்கு ஈடாகாது. **மத்தேயு 16:26** "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்"?

ஆகையால், யாக்கோபு, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி, சத்தியத்தினை விட்டு பின்வாங்கி போனவர்களை, மீண்டும் சத்தியத்திற்கு திருப்புகின்ற பணியை பற்றி, ஒரு ஆத்துமாவை நரகத்திலிருந்து திருப்பி, திரளான பாவங்களை மூடுகின்றதாக சொல்கின்றார். **யாக்கோபு 5:19** "சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்."

ஆகையால், அப்படி திருந்தி திரும்பி வருகின்றவரக்ளை நாமும் கிறிஸ்துவிற்குள் பிதா நம்மை மன்னித்து ஏற்றுக்கொண்டது போல ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட மன்னிக்கத்தக்க மனதுருக்கம் நமக்கு தேவை. நம் பிதா மன்னிக்க தயை பெருத்தவராக இருக்கின்றார் அல்லவா? அவருடைய பிள்ளைகளாகிய நாமும் அவ்வாறாகவே, அவரை போலவே மன்னிக்கின்றவர்களாக இருக்க வேண்டும். **எபே 4:30-32** "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், துஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக் கொருவர் மன்னியுங்கள்."

இறுதியாக, பிரியமானவர்களே, நம் பிதாவை போலவும், நமது ஆண்டவர் இயேசுவை போலவும் நாமும், சத்துவமற்ற மக்கள் சத்துவம் பெறும்படி ஜெபிக்கின்றவர்களாக, சத்தியத்தினை அறியாதவர்களுக்கு சத்தியம் அறிவிக்கின்றவர்களாக, சத்தியத்தினை விட்டு விலகியவர்களை மீண்டும் சத்தியத்திற்கு திருப்புகின்றவர்களாக மனதுருக்கமுடையவர்களாக இருப்போம். நடப்போம். கர்த்தர் தாமே ஆசீர்வதித்து வழிநடத்துவராக.

அன்புடன்,
-ஆசிரியர்

Gospel Through Media by World Evangelism Team

Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV : Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.* ***Salvation TV :*** *Every Sunday 2.00 p.m.*

Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV : Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

Arjunan in Tamil on Nambikai TV & Radio : TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV : Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana TV :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

P.R. Swamy & Douglas in Tamil on Radio : Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

P.K. Varghese in Malayalam on JaiHind TV : Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV : Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

மனதுருக்கமான பெண்கள்

பிரியமானவர்களே, இந்த மாதம் தேவனின் மிகச்சிறந்த பண்புகளில் ஒன்றான மனதுருக்கம் என்பதைப் பற்றியும், அதை வேதாகமத்து பெண்கள் தங்கள் வாழ்நாளில் எப்படி கடைப்பிடித்தார்கள் என்பதைக் குறித்தும், அதினாலே அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தை, அனுகிரகத்தை தங்கள் வாழ்வில் எப்படி பெற்றுக்கொண்டார்கள் என்பதையும் தெரிந்துகொள்வோம்! **(எபே 4:32, கொலே 3:12,13).**

ரெபேக்காள்

இவர்களைப் பற்றி நாம் வேதாகமத்தில் படிக்கும் போது, தனக்கு யார் என்று தெரியாத ஒருவர் வந்து, தாகத்தினால் நாவரண்டு தண்ணீர் கேட்கும்போது, அவருக்கு குடிக்க தண்ணீர் கொடுத்து, அவரின் மிருகங்களுக்கும் தண்ணீர்கொடுத்தாள். இவளின் மனதுருக்கத்தின் செயல்பாடே இந்த கிரியை! இதன் பலனாக அவள் ஈசாக்கை தன் வாழ்க்கை துணையாக பெற்றாள். அந்த ஈசாக்கின் தேவனைதான் இன்று நாம் வணங்குகிறோம்.

நகோமி

தன் கணவனை இழந்து, தன் மகன்களையும் இழந்தார். தன் வாழ்வில் பெரும் இழப்புகளை அடைந்தாலும், அவள் தன்னை நம்பி வந்திருந்த தன் மருமகள்களுக்கு நன்மையானவைகளையே செய்ய நினைத்தாள். ரூத் தன்னோடே இருப்பதை ஏற்றுக்கொண்டு அவளுக்கு நற்காரியங்களை அமைத்து கொடுத்தாள்; இவரின் இந்த மனதுருக்கக செயலினாலே ரூத் புது வாழ்வு பெற்றாள். ரூத்துக்கும் போவாஸிற்கும் பிறந்த குழந்தைத ான் ஒபேத். இவருடைய சந்ததியில் தான், தாவீது அரசன் பிறந்தார். அந்த தாவீதின் குமாரனாக நமது ஆண்டவர் இயேசு பிறந்தார். நாமும் நம்மை நம்பி இருப்பவர்களுக்கு நன்மை செய்வோம். தேவனிடத்தில் நாம் ஆசீர்வாதம் பெறுவோம்.

ராகாப்

ராகாப் என்பவள் மோசமான வாழ்வு வாழ்ந்தாள். ஆயினும் ஒரு கட்டத்தில், கர்த்தருக்கு பயந்து தன்னை நம்பி வந்த கர்த்தருடைய மனுஷர்களை அவள் காப்பாற்றினாள். அவர்களின் உயிருக்காக மனதுருகி தன் உயிரை பனையம் வைத்தாள். அதினால் அவள் குடும்பம் முழுவதும் பாதுகாக்கப்பட்டது.

ரெபேக்காள், நகோமி, ராகாப் ஆகிய இந்த பெண்களின் தெய்வீக குணமாகிய மனதுருக்கத்தினாலே, இவர்களை குறித்து நாம் இந்த நூற்றாண்டு வரை பேசுகிறோம். நாமும் இவர்களைப் போல பிறர் மீது மனதுருகும்போது, தேவன் நம்மையும் இவர்களைப் போல ஆசீர்வதிப்பார். இயேசு மனதுருகினார் **(மத் 9:36).** மனதுருக்கம் என்பது, யார் துன்பத்தில் இருக்கின்றார்களோ, அவர்களுக்கு அந்த நிலையை மாற்ற உதவி செய்வதாகும் **(மத் 9:36).**

இப்படிப்பட்ட குணாதிசயமே, நம் தேவனோடு கலந்த ஒன்றாகும். தேவன் மனதுருக்கம் நிறைந்தவர். அதினால்தான், பாவிகளாகிய நமக்காக தன் ஒரே மகனை பலியாக கொடுத்தார். அப்படிப்பட்ட தேவனுடையவர்களாகிய நாமும், நம் வாழ்வில் இவைகளை கடைபிடிக்க வேண்டும். நிலையில்லா வாழ்வில், நிலையான இயேசுவின் அன்பை, இந்த உலகில் யாவரும் அறிந்துகொள்ள மனதுருகி நன்மை செய்வோம்!

– பி. பெவர்லி லிதியா கிங்ஸ்லி

சிறுவர்க்கான கேள்விகள்

கீழே உள்ள கட்டங்களில் 'ம்' என முடியும் ஆவியின் கனியை கண்டுபிடித்து எழுதி அனுப்பவும்.



அன்பான வாலிப தம்பி, தங்கைகளே! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துகிறேன். நீங்கள் அனைவரும் சந்தோஷமாக இருக்கிறீர்கள் என்று கிறிஸ்துவுக்குள் நான் விசுவாசிக்கிறேன்.

நாம் எல்லாரிடமும் பழகும்போது ஒரே மாதிரியாகப் பழகுவதில்லை. பொதுவாக வாலிப வயதில் குடும்பத்தினரிடம் கடினமாகவும், நண்பர்களிடம் அதிக அன்பாகவும் நடந்து கொள்வோம். குறிப்பாக, இப்படிப்பட்ட நாட்களில் மனதில் உருவாகின்ற அந்தக் கடினம், தொடர்ந்து வாழ்நாள் முழுதும் நீடிக்கின்ற ஒன்றாகவே இருந்து விடுகின்றது. இது மிகவும் கொடிய குணம்! மனம் கடினப்படும்போது நமக்கு நன்மையாக தோன்றுகிறதை செய்வோமே தவிர, கடவுளின் பார்வையில் இது சரியா, தவறா என்றோ; அப்பா, அம்மா பார்வையில் இது நன்மையானதா என்றோ; இது மற்றவர்களுக்கு நன்மை பயக்குமா அல்லது தீமையை விளைவிக்குமா? என்றோ, யோசிக்கவே மாட்டோம்!

ஆதி 4-ம் அதிகாரத்தில் தன் இருதயம் கடினப்பட்ட நிலையில், காயீன், தன் உடன் பிறந்த சகோதரனை கொல்லும் மோசமான நிலையை பார்க்கின்றோம்.

யாத்திராகமம் முழுவதும், பார்வோனின் இருதயம் கடவுளுடைய வார்த்தைக்கு செவி கொடாமல் கடினமானது என்று நாம் வாசிக்கின்றோம்.

இஸ்ரவேல் ஜனங்கள், தங்கள் வனாந்திர யாத்திரை முழுவதும் கடவுள் எவ்வளவோ நன்மை செய்தும், கடின இருதயமுள்ளவர்களாகவே இருந்தனர்.

நீதி 29:1 'தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்' என்று எச்சரிக்கின்றது.

ஆண்டவர் இயேசு ஒரு அழகான குணத்தை நமக்கு கற்றுக்கொடுக்கின்றார். அது என்ன தெரியுமா 'மனதுருக்கம்' இயேசு நோயாளிகளைப் பார்க்கிறார், மனதுருகுகின்றார், பாவிகளை பார்க்கின்றார், மனதுருகுகின்றார். இப்படி நேசிக்க முடியாதவர்களிடம் தமது மனதுருக்கத்தை வெளிப்படுத்தியிருப்பதை நம்மால் பைபிள் நெடுகிலும் வாசிக்க முடியும். ஏன், இன்றளவும் நம்மீது கூட அவர் மனதுருக்கம் காட்டுகின்றவராகவே இருக்கின்றார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது!

எவர் ஒருவரால் மற்றவர்களை புரிந்துகொள்ள முடிகின்றதோ, அவரால் மனதுருக்கத்தை வெளிப்படுத்த முடியும். கடினமனம் கீழ்ப்படியாமைக்கு அழைத்துச் செல்லும், போராடுகின்ற குணம் வளரும் போது, அது நன்மைக்காக அல்ல, தீமைக்கும் பொல்லாத வழிக்கும் கொண்டு போகும். சும்மா, சும்மா அப்பா, அம்மாகிட்ட மூஞ்சை தூக்குறது; தேவையில்லாமல் சண்டை போடுவது; அவர்கள் மனம் புண்படும்படியாய் பேசுவது; அவர்களிடம் பேசாமலிருப்பது, அலட்சியப்படுத்துவது; மரியாதை குறைவாய் நடத்துவது; இதெல்லாம் கடின மனமுள்ளவர்களின் செயல்பாடாகும்.

எபே 4:32-ல் 'ஒருவருக்கொருவர் தயவாயும், மனஉருக்கமாயும் நடந்துகொள்ளுங்கள்' என்று கூறுகிறது. வேத வசனம், மன உருக்கத்தை நம்மிடம் எதிர்பார்க்கின்றது. அதனை முதலாவது வீட்டிலிருந்தே துவங்குவோம். அப்பா, அம்மாவிடம் மனதுருக்கம் காட்டுவோம். அவர்கள் என்ன சொன்னாலும் அதை அப்படியே கேட்டு செய்வோம். அவர்களோடு சந்தோஷமான நேரங்களை செலவிடுவோம். எவ்வளவு கடினமாக நடந்து கொண்டாலும், அதை அறவே மறந்து அன்பை வெளிக்காட்டுகின்ற தாயிடமும், தகப்பனுடனும் மன உருக்கமாய் நடப்போம். ஏனென்றால், இது பைபிள் கடவுளின் எதிர்பார்ப்பு. இதை நிறைவேற்ற முயற்சிப்போம்.

– உங்கள் அண்ணன்
JP

பாடம் - 5

கண்ணாரக் கண்ட சாட்சி

Eye-Witness Testimony

விசுவாச அறிக்கைகளும் ஆதிகால பாடல்களும்

பவுல் தனது நிரூபங்களை நற்செய்தி நூல்கள் எழுதப்படுவதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்பாக, கி.பி. 40களில் எழுதத் துவங்கினார். அவர் தமது நிரூபங்கள் சிலவற்றில் பவுலால் ஒன்றுபடுத்தப்பட்ட பாடல்களும் விசுவாச அறிக்கைகளும் சபையில் பயன்படுத்தப்பட்டன. இந்த பாடல்களும் அறிக்கைகளும் கவிதை நடையில் இருப்பதைக் காணலாம். இன்று பிள்ளைகள் ஓசை நயத்தோடும் பாடலோடும் கற்றுக்கொள்வது போல, ஆதிக்கிறிஸ்தவர்கள் இதே மாதிரியான நுணுக்கங்களின் அடிப்படையில் கற்றுக்கொள்ள சத்தியத்தை மனப்பாடம் செய்தனர்.

ஆதிசபையின் மிக முக்கியமான உபதேசங்களில் சில, கிறிஸ்தவப் பாடல்கள் மூலமே வெளிப்படுத்தப்பட்டன பவுலின் நிரூபங்களில் மட்டுமே பாடல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டன. உதாரணங்கள், எபேசியர் 5:14; பிலிப்பியர் 2:6-11; கொலேசெயர் 1:15-20; 1 தீமோத்தேயு 3:16ல் காணப்படுகிறது. பிலிப்பியரில் சொல்லப்படுகிற பாடலில் இயேசு கிறிஸ்து சுபாவத்தில் தேவன் என்று உறுதிப்படுத்துகிறது. கொலேசெயரில் கிறிஸ்துவை "அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம்" என்று காட்டுகிறது. ''அவர் சிலுவையில சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ள வைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்கு பிரியமாயிற்று இப்படிப்பட்ட பாடல்கள் மூலம் முதல் நூற்றாண்டின் முன்பகுதியில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து என்ன எண்ணம் இருந்தது என்பதை வெளிப்படுத்துகிறது.

1 கொரிந்தியர் 15:3-8

1 கொரிந்தியர் 15:3-8ல் விசுவாச அறிக்கையின் குறிப்பிடத்தக்க முக்கியப் பகுதி பவுலால் குறிப்பிடப்படுவதைக் காணலாம். இங்கே பவுல், நுட்பமான ஒரு பதத்தைப் பயன்படுத்தியிருப்பது. ஒரு குறிப்பிட்ட அமைப்பில் வாய்மொழி பாரம்பரியத்துடன் தன்னிடத்தில் வந்ததற்கேற்ப கடந்து போனார் என்பதை குறிப்பிட்டுக் காட்டுகிறது. அவர், "நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும் பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் பின்பு ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள். சிலர் மாத்திரம் நித்திரையடைந்திருக்கிறார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன் பின்பு அப்போஸ்தல ரெல்லாருக்கும்தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு, அகால பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்.''

இந்த அறிக்கையின் முதல் பகுதி (வசனம் 3-5), மனப்பாடம் பண்ண ஏதுவாக பாடல் வடிவத்தில் எழுதப்பட்டது. இரண்டாம் பகுதி (வசனங்கள் 6-8)ல் "கேபாவை'' (பேதுருவின் அராமிக் பெயர்) குறிப்பிட்டு மேலும் "பன்னிருவர்'', "எழுப்பப்பட்டார்'', "மூன்றாம் நாள்'', போன்ற தொன்மை வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தைகள் ஆரம்ப தொன்மை வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தைகள் ஆரம்ப காலத்தை விவாதிக்கிறது.

இந்த விசுவாச வாக்கியங்களை பவுல் எப்பொழுது பெற்றார்? இயேசு கி.பி. 30-ல் சிவவையில் அறையப்பட்டிருப்பாரானால், பவுலுக்கு (தரிசுப் பட்டணத்தானாகிய சவுலுக்கு) கி.பி. 32ல் தரிசனமானார். மூன்று நாட்களுக்குப் பிறகு, தமஸ்குவில் பவுல் அனனனியா மூலம் திருமுழுக்கு பெற்று, சபைக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். (அப்போஸ்தலர் 19:19-20). ஏறத்தாழ கி.பி. 35ல், பவுல் அப்போஸ்தர்களிடம் எருசலேமிலே தனது காலத்தைக் கழித்தார். (காலத்தியர் 1:18.19). இந்தக் காலங்களிலே, அவருக்கு சபையில் பயன்படுத்தப்பட்ட விசுவாச அறிக்கை கொடுக்கப்பட்டது. பவுல் ஏறத்தாழ இரண்டிலிருந்து ஐந்து வருடக் காலக்கட்டத்தில் இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்ட அறிக்கையை பவுல் பெற்றுக் கொண்டார்.

– அடுத்த இதழில் தொடரும்...

மனதுருக்கமான அடிமை சிறுமி

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? போன மாதம் சிறுவர் பகுதி படித்து, கேள்விக்கு பதில் எழுதின உங்களை நான் வாழ்த்துகிறேன்.

பைபிளில் 2 ராஜாக்கள் புத்தகம் 5ம் அதிகாரத்தில் நீங்கள் படிக்கும் போது, நாகமான் என்ற ஒரு அண்ணன் இருந்தாங்க, அவங்க போர் படைவீரர்களுக்கு தலைவனாகவும், பராக்கிரமசாலியாகவும் இருந்தாங்க என்று அவரை குறித்து அறிந்துகொள்கின்றோம்.

ஆனால் அந்த அண்ணாவுக்கு ஒரு பிரச்சனை இருந்தது. என்ன தெரியுமா? குஷ்டரோகம் ஒருவருக்கு இருந்தால், அவர்கள் கிட்ட யாரும் போகமாட்டார்கள், அவர்களை தொட பயப்படுவார்கள். மேலும் அவர்களை ஒதுக்கிவைப்பார்கள்.

பாருங்க பிள்ளைகளா, எவ்வளவுதான் பதவியிருந்தாலும், பொறுப்பில் இருந்தாலும் வேலைக்காரர்கள் இருந்தாலும் படைவீரராக இருந்தாலும், குஷ்டரோகம் என்பது தினமும் வேதனைக்குரிய காரியம்தான். எத்தனையோ வைத்தியரையும் அந்த அண்ணா பார்த்தாச்சு ஒன்றும் குணமாகவில்லை.

ஆனால் நாகமான், இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறுபெண்ணை சிறையாக பிடித்துகொண்டு வந்து தன் வீட்டில் அடிமையாக வைத்திருந்தார், அந்த பெண் நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்துகொண்டிருந்தாள். அந்தப் பெண் தன்னை அடிமையாக கொண்டு வந்த நாகமான் என்பவருக்கு குஷ்டரோகம் இருக்கிறது என்பதை அறிந்து மனது உருகி உதவி செய்கிறார்.

என்ன தெரியுமா? சமாரியாவிலுள்ள எலிசா தீர்க்கதரிசியினிடத்தில் போனால் குணமாகலாம் என்றாள். உடனே அவர் போகும்போது, அந்த தீர்க்கதரிசி தன் வேலைக்காரரை அனுப்பி, நாகமானை யோர்தான் நதியில் ஏழுமுறை மூழ்கி எழுந்தால் குணமாகலாம் என்றார். அதை செய்த பிற்பாடு நாகமான் குணமாகிறார்.

கடவுளுக்கு பிரியமான செல்லப்பிள்ளைகளா! நீங்களும் எத்தனையோ பேர், சர்ச்சுக்கு வராமல், ஜெபம் செய்யாமல், பைபிள் படிக்காமல், இருக்கின்றீர்கள். அவர்கள்மேல் இந்த சிறுபெண்ணாகிய அக்காவைபோல் நீங்களும் பிறருக்கு உதவுவீர்களா! உங்க கூட சபைக்கு

அழைத்துச் செல்லுதல், இந்த பத்திரிக்கையை நீங்கள் படித்த பிறகு பிறருக்கு கொடுத்து படிக்க வைத்து அவர்களும் ஆண்டவரை அறிந்து நல்வழிப்பட, மனதுருக்கம் காட்டுவீர்களா? கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

மனப்பாட வசனம் : கொலோசெயர் 3:12

''ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு;''

– அன்பு ஏசுதாஸ்

வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

மனதுருக்கமான விதவை..

ஹாய் குட்டீஸ் ! உங்கள் எல்லாருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே, ஸ்தோத்திரங்கள் மற்றும் வாழ்த்துதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாதம் நாம் மனதுருகுதல் என்ற தலைப்பின் கீழாக படிக்கப்போகிறோம். (மனதுருகுதல் = மனது+உருகுதல்) என்று இவ்வாறாகப் பிரித்து படிக்கலாம். நாம் பிறர்மீது இரக்கம் கொள்ள வேண்டும். அப்படி நாம் செய்வதற்கு, இந்த மனதுருக்கமானது நமக்கு உதவக்கூடியதாக உள்ளது. பிறர்மீது நாம் மனதுருக்கம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

நாம் செய்யும் சின்ன சின்ன தவறு செய்தாலும், நம் பெற்றோர்கள், நம்மீது மனதுருக்கம் உடையவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆம், வேதாகமத்தில் நாம் பார்த்தோமானால் சாறிபாத் ஊர் விதவையானவள் தன் ஒரே மகனுடன் வாழ்ந்துவந்தாள். அப்போது அவளுடைய ஊரில் கொடிய பஞ்சம் இருந்தது. (பஞ்சம்–உணவில்லாமல் துன்பப்படுவது (அ) உணவு பற்றாக்குறை) அப்போது, இருந்தது ஒரு நாள் எலியா என்னும் கடவுளுடைய மனுசன், அந்த ஏழையிடம் வருகிறார். அவள் விறகு பொறுக்கி கொண்டிருந்தால் அவள் ஒரு ஏழை என்பதை அறிந்துகொண்டார். அவர், அவளிடம் குடிக்கிறதுக்குக் கொஞ்சம் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் கொண்டுவா என்றார். பின் மீண்டும் அவளைக் கூப்பிட்டுக் கொஞ்சம் அப்பமும் கொண்டு வா என்றார்.

அதற்கு அவள் என்னிடம் ஒரு பிடிமாவும் கொஞ்சம் எண்ணெய்யும் மட்டுமே உண்டு. அதில் அடைகளைப் பண்ணி நானும் என் குமாரனும் சாப்பிட்டு செத்துப் போவதற்காகத்தான் இந்த இரண்டு விறகுகளைப் பொறுக்குகிறேன் என்று உம்முடைய தேவனாகிய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றாள்.

இதன் பிறகு, எலியா, அவளிடம், பயப்படாதே, நீ கூறினபடியே ஆயத்தப்படுத்து, ஆனால் முதலில் ஒரு சிறிய அடையைப் பண்ணி எனக்குத்தா பின்பு உன் குமாரனுக்குக் கொடு என்றார்.

அதைக் கேட்டவுடன் அவள், இந்த உணவே எங்களுக்கு கடைசி உணவு, இதை சாப்பிட்டு சாக போகிறோம். இதன்பின் எங்களுக்கு உணவில்லை. இருப்பினும் எலியாவின் மீது மனதுருகி அடையைப் பண்ணி எலியாவுக்கு கொடுத்தாள். அப்பொழுது அவள் வாழ்வில் ஒரு அற்புதம் நடந்தது.

பஞ்ச காலம் முடியும்வரை, அவளுடைய பானையில் மா செலவழிந்து போகவுமில்லை எண்ணெய் குறையவுமில்லை.

இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளுகிறோம் செல்லங்களா? நாம் எந்த சூழ்நிலையிலும் இருந்தாலும் சரி பிறர் மீது மனதுருக்கமுடையவர்களாக இருந்தால், கர்த்தர் நம்மையும், நம் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார். ஆமென்!

என்ன செல்லங்களா! இந்த ஏழையைப் போல, நீங்களும் பிறரிடம் மனதுருக்கமுடையவர்களாக இருப்பீர்கள் தானே? இப்படியாக, மனதுருகி தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள அக்காவின் வாழ்த்துக்கள்.

மனப்பாட வசனம் : ஏசாயா 30:18 "ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதி செய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்."

– ரா. ஏஞ்சலின் கமலம்

மனதுருக்கமான ரூத்..

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். நகோமி–ரூத் என்கிற மாமியார் மருமகளை குறித்துதான் நாம் இந்த முறை கற்றுக்கொள்ளப் போகிறோம்.

பெத்லகேம் என்ற ஊரிலே எலிமெலேக்கு என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவி பெயர் நகோமி அவருக்கு இரண்டு மகன்கள் ஒருவன் பெயர் மக்லோன் மற்றவன் பெயர கிலியோன். இவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த தேசத்தில் பஞ்சம் வந்ததால் மோவாப் என்ற தேசத்திற்குப் போய் அங்கே தங்கிவிட்டார்கள். கொஞ்ச நாட்களுக்கு பிறகு எலிமெலேக்கு அந்த தேசத்திலே இறந்துபோனார். நகோமி தன் இரண்டு மகன்களுக்கும் இந்த மோவாய் தேசத்திலே இரண்டு பெண்களை பார்த்து திருமணம் செய்துவைத்தார். ஒருத்தி பெயர் ஓர்பாள் மற்றவள் பெயர் ரூத்.

பத்து வருஷம் கழித்து நகோமியின் இரண்டு மகன்களும் இறந்து போனார்கள். கர்த்தர் தங்கள் தேசத்தில் ஆகாரம் அருளினார் என்பதை கேள்விப்பட்ட நகோமி தன் இரண்டு மருமகள்களை கூட்டிக்கொண்டு பெத்லேகேமிற்கு புறப்பட்டாள். போகிற வழியிலே அவர்கள் இருவரையும் நோக்கி நீங்கள் உங்கள் தாய் வீட்டுக்கு திரும்பி போய் திருமணம் செய்துகொண்டு சுகமாய் வாழ கர்த்தர் உங்களுக்கு தயை செய்வாராக என்றாள். முதலில் இருவரும் நகோமியை தனியே விட்டு செல்ல மறுத்தார்கள். பிறகு ஓர்பாள் மட்டும் அவர்களை விட்டு பிரிந்து திரும்பி சென்றாள்.

அதற்கு நகோமி ரூத்தை பார்த்து நீயும் உன் சகோதரியைப்போல் உன் தேசத்திற்கு திரும்பிபோ என்றாள். அதற்கு ரூத் நான் உங்களைவிட்டு திரும்பி போவதைப்பற்றி இனி நீங்க பேசக் கூடாது. நீங்கள் எங்கே போகிறீர்களோ அங்கே நானும் வருவேன் உங்கள் தேசம்தான் என் தேசம் உங்கள் ஜனம் தான் என் ஜனம். உங்கள் தேவன் தான் என் தேவன் என்று சொன்னாள் அவளின் உறுதியை பார்த்து நகோமி அதைக் குறித்து மீண்டும் அவளிடம் பேசவில்லை.

அவர்கள் இருவரும் பெத்லெகேமிற்கு சென்றார்கள் அங்கே ரூத் நகோமிற்குத் தேவையான உதவிகளை உணவு கொடுத்து நன்றாக அவரை பார்த்து கொண்டாள். நகோமியின் சொற்படி கேட்டு தேவ சித்தத்தின்படி போவாஸ் என்பவரை திருமணம் செய்து ஒரு ஆண் பிள்ளையும் பெற்றாள்.

பார்த்தீங்களா குட்டீஸ் ! கணவனை இழந்து தன் மகன்களையும் இழந்து வயதான காலத்தில் தனித்திருந்த

தன் மாமியாராகிய நகோமி என்பவரை மருமகளாகிய ரூத் அப்படியே விடாமல் அவள் மனதுருக்கம் கொண்டு முதுமையில் தேவையான உதவிகளை செய்து உணவளித்து, ஆறுதலாயிருந்து அவர் சொல்படி கேட்டு தேவ சித்தத்தை நிறைவேற்றினது போல நீங்களும் அப்பா அம்மா சோர்ந்து போகும் போது வயதாகும்போது கூடவே உதவியாய் இருந்து வேலைகளை பகிர்ந்து கொண்டு அவர்கள் மீது மனதுருகி தேவ சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

மனப்பாட வசனம் : ஏசாயா 54:10 "மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்."

– குயினி பிரதீப்

சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. ஹானா ஜோதி – மதுரை
2. A. ஏஞ்சல் ஜோயன்னா – மதுரை
3. G. ஜெர்லின் – ரஸ்தா
4. S. ஜுடோலியா – ரஸ்தா
5. M. ஜோனா – கரூர்
6. M. ராஜா – கரூர்
7. J. நவீன் பீட்டர் – மதுரை
8. J. கிறிஸ்டினா ஜாய் – மதுரை

மனதுருக்கமான யோசேப்பு

அன்பான மழலை செல்லங்களுக்கு, ஆண்டவர் இயேசுவின் நாமத்தினால், எனது அன்பின் வாழ்த்துக்கள். நீங்க அனைவரும் நன்றாக படிக்கவும், கர்த்தருக்கு பயந்து நடக்கவும் தொடர்ந்து ஜெபிக்கின்றோம்.

செல்லங்களே, நாம் இந்த மாதம் மனதுருக்கம் என்கின்ற குணத்தினை பற்றி, யோசேப்பிடமிருந்து கற்றுக் கொள்ளப் போகிறோம். நீங்க ரெடி தானே?

யோசேப்பு அண்ணனைப் பற்றி படிக்கலாம், அது என்ன மனதுருக்கம்? என நீங்கள் கேட்பது எனக்கு கேட்கின்றது. மனதுருக்கம் என்பது மற்றவர்கள் மீது கரிசணை அதாவது கருணைகொண்டு இரக்கப்பட்டு உதவி செய்வதாகும். இப்படிப்பட்ட நல்ல குணங்கள் யோசேப்பு அண்ணனிடமும் இருந்தது.

யாக்கோபு என்பவருக்கு 12 மகன்கள், அதில் 11வது மகன்தான் இந்த யோசேப்பு, யோசேப்பு மிகவும் கர்த்தருக்கு பயந்து ஒழுக்கமானவராக இருந்தார். அதனால் அவரது அப்பாவிற்கு அவர் மிகவும் செல்லப் பிள்ளையாக இருந்தார். இதனை கண்டு பொறாமை கொண்ட அவரது 10 அண்ணன்களும் சேர்ந்து, யோசேப்பை 20 வெள்ளிக்காசுக்காக அடிமையாக வேற்று மக்களிடம் விற்றுவிட்டனர்.

இது எவ்வளவு கொடுமையான ஒன்று! ஆம், அப்பா வீட்டிலே செல்லமாக இருந்த பிள்ளை, அடுத்த நாட்டிலே அடிமையாக இருப்பது என்பது கொடுமையானது இதனைவிட பல பெரிய கொடுமைகளை, துன்பங்களை யோசேப்பு அந்த நாட்டிலே அனுபவித்தார். நீதியுள்ள கர்த்தர் யோசேப்பை அந்த எகிப்து நாட்டிலே பெரிய அதிகாரியாக உயர்த்தினார்.

அப்பொழுது உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டானபடியால், யேஸசேப்பின் 10 அண்ணன்களும் உணவு தானியம் வாங்க எகிப்திற்கு வந்தனர். அவர்களை அடையாளம் கண்ட யோசேப்பு, அவர்கள் தனக்கு செய்த தீங்கிற்கு தண்டிப்பதற்கு பதிலாக, அவர்களது இயலாமை கண்டு மனதுருகி மன்னித்து, அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் வாழ்வதற்கு உதவி செய்தார்.

மழலை செல்லங்களே, நம் அண்ணனோ, அக்காவோ, தம்பியோ, தங்கையோ அல்லது நண்பர்களோ, யாராவது நமக்கு தீங்கு செய்துவிட்டால், பதிலிற்கு நாம் தீங்கு செய்யாமல், யோசேப்பை போல, மனதுருகி மன்னித்துவிடுவோம். அப்பொழுது கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து உயர்த்துவார்.

மனப்பாட வசனம் : எபே 4:32 "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.'

– பிரியா ஆண்டனி

பொதுவான செய்திகள்

தமிழ் இலக்கியம்

சங்க இலக்கிய நூல்கள்

❖ அகத்தியம் ❖ தொல்காப்பியம்

பதினெண்மேற்கணக்கு – எட்டுத்தொகை

❖ நற்றிணை ❖ பரிபாடல்
❖ குறுந்தொகை ❖ கலித்தொகை
❖ ஐங்குறுநூறு ❖ அகநானூறு
❖ பதிற்றுப்பத்து ❖ புறநானூறு

பத்துப்பாட்டு

❖ திருமுருகாற்றுப்படை ❖ மதுரைக்காஞ்சி
❖ பொருநராற்றுப்படை ❖ நெடுநல்வாடை
❖ சிறுபாணாற்றுப்படை ❖ குறுஞ்சிப்பாட்டு
❖ பெரும்பாணாற்றுப்படை ❖ பட்டினப்பாவை
❖ முல்லைப்பாட்டு ❖ மலைபடுகடாம்

ஆகஸ்ட் மாத கேள்விகள்

1. திரளான ஜனங்களை கண்டு, மனதுருகி ஆண்டவர் இயேசு என்ன செய்தார்?
2. நம்முடைய தேவன் மன உருக்கமானவர் என வாசிப்பதெங்கே?
3. எது பிணியாளிகளை இரட்சிக்கும்?
4. எப்படி கிறிஸ்துவின் பிரமாணத்தினை நிறைவேற்ற வேண்டும்?
5. அறிவை வெறுத்து, வேதத்தினை மறந்தால் என்னவாகும்?
6. மேய்ப்பனில்லாத ஆடுகளை போலிருந்தவர்களை கண்டு, ஆண்டவர் இயேசு என்ன செய்தார்?
7. துன்மார்க்கன், அக்கிரமக்காரன் கர்த்தரிடத்தில் திரும்பினால், என்ன செய்வார்?
8. ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுகிறவன் யஸர்?
9. எப்படியிருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் மன்னித்தது போல மன்னிக்க வேண்டும்?
10. என் கிருபை உன்னைவிட்டு விலகாமல் இருக்கும் என்று சொன்னவர் யார்?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-09-2023

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

சென்ற இதழ் பதில்கள்

1. யோவான் 15:12
2. 1 யோவான் 4:20
3. எபே 5:21
4. கொலோ 3:9
5. கலா 6:1
6. கலா 6:10
7. சங் 133:1
8. ரோமர் 13:8
9. மத்தேயு 18:10
10. யோவான் 14:24

சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. ஈஸ்வரி – கரூர்
2. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
3. C. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
4. A. ஆனி விக்டோரியா – சென்னை
5. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
6. R. சரோஜா – தென்கலம்
7. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
8. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
9. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
10. Mrs. ஹெப்ஸிபா தாமஸ் – படப்பை
11. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
12. Mrs. ஹெலன் திலக் – தூத்துக்குடி
13. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
14. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
15. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
16. Mrs. A. ரோஸ்மேரி – சென்னை
17. Mrs. ஸ்டெல்லா சாத்ராக் – நெல்லை
18. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – நெல்லை
19. J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் – மதுரை
20. Mrs. P.S. ருக்மணி – ஈரோடு
21. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
22. S. லீதியாள் – தஞ்சாவூர்
23. S. டேவிட் சாந்தகுமார் – தென்காசி
24. Mrs. A. எமல்டா சுந்தர்சிங் – ஈரோடு
25. Mrs. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
26. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
27. Mrs. R.P. டேவிட் – சேலம்
28. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
29. Mrs. ஞான சிரோன்மணி – மதுரை
30. A. டேவிட் ஜெயசந்திரன் – மதுரை
31. A. லலிதா – புதுக்கோட்டை
32. N. ஜான் செல்லையா – மதுரை
33. Mrs. J. ஜெயராணி – மதுரை
34. Mrs. மீனாள் தெய்வசிகாமணி – மூலனூர்
35. Mrs. குப்பத்தம்மா – மூலனூர்
36. Mrs. மரிய செல்வராஜ் – மூலனூர்
37. Mrs. புனித வள்ளி – மூலனூர்
38. Mrs. லெட்சுமி – மூலனூர்
39. Mrs. இந்திரா பாண்டி – மதுரை
40. Mrs. சூரியா சௌந்தர்பாண்டி – மதுரை
41. J. விஜய் – மதுரை
42. Mrs. பாக்கியராஜம் – மதுரை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : **Arasaradi, Madurai**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th August 2023
Posted at Arasaradi HPO on 10th 11th August 2023

கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்

அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

தபால் வழி பைபிள் பாடங்கள்

கைபிரதிகள்

உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

BIBLE STUDY BOOKS IN ENGLISH







AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : biblecourseindia@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To